DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
Spl.S.C.No.3/2025
P.W.14

| | | |
|---|---|---|
| Name | : | திரு.செல்வராஜ் |
| Father's Name | : | திரு.செல்லமுத்து |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 53 |

(Accused is present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of March 2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது தொட்டியம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருக்கிறேன். கடந்த 04.10.2024ம் தேதி 15.30 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது சின்னப்பள்ளி பாளையம், ஆலம்பாளையம் புதூர், கீழத்தெருவை சேர்ந்த சேகர் மனைவி கிருஷ்ணவேணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்.257/2024, பிரிவுகள் 329(4), 296(b), 125, 132, 356(2), 351(3) BNS, உ/இ. பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST Act and Sec.4 of TNPWH Act–ன் கீழ் வழக்கை பதிவு செய்தேன். புகார் மனுவையும், அசல் முதல் தகவல் அறிக்கையையும் இந்த நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.6** ஆகும். இந்த வழக்கானது சிறப்பு சட்டத்தின் கீழான வழக்கு என்பதால் புலன்விசாரணை அதிகாரியை நியமிக்க வேண்டி திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

இந்த வழக்கில் குற்ற நிகழ்வு நாள் என்பது 01.10.2024ம் தேதி மதியம் 3.30 மணி என்றால் சரிதான். அ.சா.1 கிருஷ்ணவேணி 04.10.2024 ஆம் தேதி மதியம் 3.30 மணிக்கு புகார் கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். அ.சா.1 கிருஷ்ணவேணி புகார் கொடுத்த காலத்தில் தொட்டியம் ஊராட்சி ஒன்றிய தலைவராக இருந்தார். அவர் கொடுத்த புகார் மனுவானது எழுத்து மூலமாக அல்லது கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டதா என்று தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் சுமார் 2 கிலோ மீட்டர் என்பதும் அந்த தொலைவை 10 நிமிடத்தில் அடைந்து விட முடியும் என்று சொன்னால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் 8ல் தாமதத்திற்கான சிறப்பு காரணம் எதுவும் சொல்லவில்லை. புகாரிலும் அவர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அவர் கொடுத்த புகாரில் எதிரில் எந்த வகுப்பை சேர்ந்தவர் என்பது தொடர்பாகவும் பட்டியல் வகுப்பை சேராதவர் மீது புகார் கொடுப்பதாக இருந்தால் அது தொடர்புடைய சங்கதிகள் குறிப்பிடப்பட்டு இருந்ததா என்றால் இல்லை. அ.சா.1 கிருஷ்ணவேணி கொடுத்த புகாரில் எதிரி சார்ந்திருக்கும் சமுதாயத்தை பற்றி குறிப்பிடாத நிலையிலும் வாய் மொழியாக என்னிடம் அதை தெரிவித்தார். புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை கடந்த 05.10.2024ம் தேதி மாலை 5.40 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டு 26 மணி நேரம் கழிந்த பிறகு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு நீதிமன்றத்தால் பெறப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் சரிதான். தொட்டியம் காவல் நிலையத்தில் இருந்து இந்த நீதிமன்றத்திற்கு இரண்டு மணி நேரத்தில் வந்து விட முடியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புகார் மனுவானது என்னால் ஜோடிக்கப்பட்டது என்ற காரணத்தினால் தான் தாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு இருக்கிறது என்றால் சரியல்ல. அ.சா.5 ரேணுகா, அ.சா.6 சீதா ஆகியோர்களும் புகார் கொடுத்து இருக்கிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் கண்ட புகார் மனுவானது காவல் ஆய்வாளருக்கு தான் குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் பார்வையிட்டு என்னிடம் கொடுத்தார் என்றால்

VERDICTUM.IN

இல்லை. என்னிடம் நேரடியாக அந்த புகார் மனுவை கொடுத்தார். ஒரு புகார் மனுவின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டால் முதல் தகவல் அறிக்கை நகலை நிகழ்நிலை புகார்தாரத்துக்கு வழங்க வேண்டும் என்றால் சரிதான். அவரிடம் அசல் முதல் தகவல் அறிக்கையில் பெற்றுக் கொண்டதாக கையொப்பம் பெற வேண்டும் என்று சொன்னால் சரிதான். ஆனால் நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் நிகழ்நிலை புகார்தாரின் கையொப்பம் பெறப்படவில்லை என்றால் சரிதான். புலன் விசாரணை அதிகாரி நியமிக்க வேண்டி காவல் கண்காணிப்பாளருக்கு நான் கொடுத்ததாக சொல்லக் கூடிய வேண்டுகோள் கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.1 கிருஷ்ணவேணி வேறு ஒரு புகாரை கடந்த 01.10.2024ம் தேதி காவல் நிலையத்திற்கு வந்து வாய் மொழியாக கொடுத்து அந்த புகாரை காவல் ஆய்வாளர் அருகில் இருந்த காவலர் தட்டச்சு செய்து அன்றே என் வசம் பார்வைக்கு வைக்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு புகாரானது பொய்யான சங்கதிகளை கொண்டு ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. நடக்காத சம்பவத்தை நடந்ததாக ஜோடிக்கப்பட்டு புகார் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXXX,

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.